1969 ஆகஸ்ட் 18]

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்
குடிதண்ணீர்ப் பற்றுக்குறை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள், "தமிழ்நாட்டில் பரவலாகப் பல பகுதிகளில் குடிதண்ணீர் கிடைக்காமல் பொதுமக்களும் கால்நடைகளும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளதைப்பற்றி விவாதிக்க" என்று ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இதைப் பற்றிய கருத்தை அறிவிப்பதற்குத் துணை மானியக் கோரிக்கை விவாதத்தின் போது வாய்ப்பு இருக்கும் காரணத்தால் இதற்கு இப்போது நான் அனுமதி தர மறுக்கிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன் அவர்கள், "தமிழ்நாட்டின் தலைநகரமாகிய சென்னை மாநகரில் கடந்த சில மாதங்களாகக் குடிதண்ணீர் இல்லாமல் லட்சக் கணக்கான குடும்பங்கள் மிகவும் அவதிப்படுகின்றனர். கல்லூரி மாணவர் விடுதிகளிலும், மருத்துவமனைகளிலும் தேவையான தண்ணீர் இல்லை. பயங்கரமாகப் பாதிக்கப்பட்டுள்ள எல்லாப் பகுதி மக்களுக்கும் உடனடி தண்ணீர் வழங்க வேண்டிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையைப் பற்றி விவாதிக்க" ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

அவர்களுக்கும் துணை மானியக் கோரிக்கை விவாதத்தின் போது இதுபற்றிய கருத்தை அறிவிக்க வாய்ப்பு இருக்கும் காரணத்தால் இதற்கும் நான் அனுமதி தர மறுக்கிறேன்.

3. அறிவிப்பு.
மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, இப்பேரவையின் நடைமுறை விதி 6 (1)-க்கு இணங்க, இக் கூட்டத்தொடரில், மாற்றுத் தலைவர்களாக, திரு. ந. தருமலிங்கம், திரு. செஞ்சி வெ. முனுசாமி, திரு. ப. மகாதேவன், திரு. கரு. சீமைச்சாமி, திரு. சி. கோவிந்தராஜன், திரு. அ. லெ. சுப்பிரமணியம் ஆகியோரை நான் நியமித்துள்ளேன். முப. 10–000

அடுத்து, அரசினர் மசோதா . . . .

திரு. வி. கே. கோதண்டராமன் : தண்ணீர்ப் பிரச்னை மிக முக்கியமான பிரச்னை. துணை மானியக் கோரிக்கைகள் வரும்போது ஐந்து அல்லது பத்து நிமிடங்கள் பேசி விடப்போகிறீர்கள். நம் மாநிலத்தில் பல பகுதிகள் மிக மோசமான நிலையில் இருக்கின்றன. ஆகவே தயவுசெய்து . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தலைவர் தீர்ப்புக் கொடுத்துவிட்டால் அதன் பிறகு உறுப்பினர்கள் அதன் மீது கருத்து தெரிவிப்பது முறையாகாது. வேண்டுமென்றால் வருகிற துணை

டானியக் கோரிக்கையில் அந்த ஒரு பொருள் பற்றியே திரு. கோதண்டராமன் அவர்கள் பேசலாம். அதற்கு அமைச்சர், அவர்கள் விரிவான விளக்கம் அளிக்க வாய்ப்பிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : தங்கள் தீர்ப்பிற்கு நான் தலைவணங்குகிறேன். நெருக்கடியான ஒரு பிரச்னைபற்றிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே தயவுசெய்து ஒரு நாள் விவாதத்திற்கு அனுமதி அளிக்கக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனியாக எழுதிக் கொடுங்கள், அதன்மீது தீர்ப்புக் கொடுக்கிறேன். அடுத்து, அரசினர் மசோதா.

4. அரசினர் மசோதா.

தமிழ்நாடு 1969-ம் ஆண்டு துயர்தணிப்பு திருவனங்கள் (சிறப்பு விதித்துறைகள்) மசோதா.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, தமிழ நாடு, 1969-ம் ஆண்டு துயர்தணிப்பு நிறுவனங்கள் (சிறப்பு விதித் துறைகள்) மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, நான் இம் மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

5. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1969-70-ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை மீது விவாதம்—(தொடர்ச்சி)

* **திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1969-70-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்தும், 1968-69-ம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கை குறித்தும் எனது கருத்துக்களை இந்தப் பேரவை முன் வைக்க விரும்புகிறேன். 1971-ம் ஆண்டுக்குள்ளாக தமிழகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் மின்சார இணைப்பு கொடுக்கப்படுமென்றும், தமிழகத்திலுள்ள எல்லாக் கிராமங்களும் மின்சார வசதி பெற்று திகழவேண்டுமென்கிற அரசின் முயற்சி நமக்கெல்லாம் மகிழ்ச்சியை அளிக்கிறது. ஆனால், 'ரூரல் எலக்ட்ரிஃபிக்கேஷன்' என்ற தலைப்பில், கிராமப்புற மின்சார வசதிக்காக 1968-69-ம், 69-70-ம் ஆண்டுகளுக்காக ஆண்டு ஒன்றுக்கு 1,250 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1971-ம் ஆண்டுக்குள்ளாக தமிழகம் முழுவதிலும் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார இணைப்பு